மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ★ இலங்கைமீது உலகவங்கி கடும் நெருக்குதல்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 5 இதழ் 98
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19-5-1994

(தொழும்பு)

இலங்கையில் மனிதவிக்கம் தொடர்பாகத் தீவிரமாக கருதுவதினால், இலங்கைக்கு எதிராகக் கடும் நெருக்குதலைக் கொடுப்பதற்கு உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஆலோசனை செய்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கம் கடந்த சில வருடங்களாக ஒவ்வொரு

(தொழும்பு)

இலங்கையில் மனிதவிக்கம் தொடர்பாகத் தீவிரமாக கருதுவதினால், இலங்கைக்கு எதிராகக் கடும் நெருக்குதலைக் கொடுப்பதற்கு உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஆலோசனை செய்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கம் கடந்த சில வருடங்களாக ஒவ்வொரு

டும் போருக்கு பெருமளவு பணத்தை வீணாக விரையமாக்கி வருவதினால், நாட்டின் பொருளாதாரத்திற் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் புதிய ரூபா நோட்டுகளை அச்சடிக்கும்படி இலங்கை அரசு நிர்ப்பந்திக்கப்படலாமென்றும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை தேர்தலை யொட்டி

(6-ம் பக்கம் பார்க்க)

## இனவாத பேச்சை ஐ.தே.க.நிறுத்தும்?

(தொழும்பு)

இலங்கையில் நடைபெற விருக்கும் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக ஐ. தே. கட்சி தற்போது இனவாதப் பேச்சுகளை தற்காலிகமாக நிறுத்தியிருப்பது ஒரு

தந்திரோபாயச் செயல் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் கூறுகையில் வரவிருக்கும் சனாதிபதி தேர்தலில் ஐ. தே. கட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

## ● புலிகள் நேற்று அதிகாலை

# புன்னாலைக்கட்டுவனில் அதிரடி

# இரு படையினர் உயிரிழப்பு

## ஆயுதங்களும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்ததுடன் பல ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை 2-40 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் ஒரே நேரத்தில் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போதே இரு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். மற்ற இராணுவத்தினர் காயங்களுடன் அருகிலிருந்த முகாம்களுக்குத் தப்பி ஓடி விட்டனர்.

இவ்விரு காவலரண்களையும்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'காமினி' இன்று எம். பி.யாகிறார்

(தொழும்பு)

இன்று காலை 9 மணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக காமினி திசநாயக்க பதவி ஏற்

வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காமினி திசநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு

(6ம் பக்கம் பார்க்க)

## பல லட்சம் ரூபா பெற்றே 'அமிட்' பதவி துறந்தாராம்

(தொழும்பு)

காமினியை எம். பி.யாக்கு வதற்காக தனது எம். பி. பதவியை துறந்த மலை இன எம். பியான ஜனாப் எம். எச்.

அமிட் பல லட்சம்ரூபாவை பெற்றுக்கொண்டே அதன் துறந்தார் என்கப்படுகிறது ஏ.எம்.பி. செய்தி தெரிவித்தது.

காமினியை எம். பியாக்கும் நோக்கில் ஏற்கனவே, பதவி துறக்கும் தேசியப்பட்டியல் எம். பி.க்கு எடுத்து கோரு

(6-ம் பக்கம் பார்க்க)

## மிக விரைவில் ரெனியும் எம். பி.யாவார்

(தொழும்பு)

திரு. ரெனி டி மெல்லை எம். பி.யாக்கும் நோக்கில் ஐ. தே. கு தேசியப்பட்டியல் எம். பி. யான திரு. கே. ஏ. றெஜி

ஜேக்கி பெரேரா ராஜினாமா செய்ய முன்வந்துள்ளார்.

ரெனி டி மெல்லை எம். பி. யாக்குவதற்காக பதவியை

(6-ம் பக்கம் பார்க்க)

## பாதாள உலக குற்றவாளிகள் பற்றி தகவல்தர பலர்மறுப்பு!

(தொழும்பு)

பாதாள உலகக் குற்றவாளிகள் சம்பந்தமான தகவல்களை பொலிசுக்கு தெரிவிப்பதில்

பாதிக்கப்பட்டவர்கள் பின் நிற்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பற்றிய தகவல்

கை பொலிஸ் தலைமையகத்துக்கு தெரிந்தால் தாங்கள் பிடிபடுவோமோ என்ற அச்சத்தினாலேயே தகவல்களை தெரிவிக்க இவர்கள் மறுக்கிறார்களாம்.

(6ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர்; கிறிஸ்மஸ் முடிவு செய்வார்

(தொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக் கட்சி வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் முழு அதிகாரமும்

அதன் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரி

(2-ம் பக்கம் பார்க்க)

## ● பிரேமா கொலை: விசாரணைக் குழுவுக்கு ஜனாதிபதி இணக்கம்

(தொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை குறித்து

விசாரணை செய்வதற்கு தனிக்கமிஷனை ஒன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க அனுமதி வழங்கி

(6-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு கூடுதல் கவனம் தேவை

(தொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்குலைத்துக் கொண்டிருக்கும் வடக்கு-கிழக்குப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க அரசாங்கம் தற்போதுள்ளதைவிடக் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமென மகிந்தவைப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பாராஜசிங்கம் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில்

இடம் பெற்ற நிதி சம்பந்தமான சம்பாஷணை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வி. குணரத்ன பேசுகையில், அரசாங்கத்தின் தலைமை பொருளாதாரக் கொள்கை காரணமாக பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார்.

ம-கி

## ● கொழும்பு குண்டு வெடிப்பு

## இரு தமிழ் வர்த்தகர்கள் வெள்ளவத்தையில் கைது

(தொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளுடன் தொடர்பாக வெள்ளவத்தையை சேர்ந்த இரு தமிழ் வர்த்தகர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் மணிக்கூடு திருத்தும் கடை உரிமையாளர் மற்றவர் சைவஹோட்டல் உரிமையாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விருவரும் தற்போது

(6-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல சைவ உணவகத்திற்கு அனுபவமிக்க உணவு பரிமாறுபவர்கள் (சப்ளையர்) தேவை. நேர்க்காண சமுகமளிக்கவும். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1023, மே/பா சமுநாடு, யாழ்ப்பாணம். (இ-1028)

### தேவை

அனுபவம், உயிர உடுத்துறைணக்காய் வரவர் பகுதி நேரக் கடைக்கு ஆள்தேவை; சில விபரங்களுடன் 23-5-94க்கு முன்னர் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: ஏ-4085 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ-4085)

### தேவை

25—45 வயதிற்குட்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம் ஒழுக்கம் முக்கியமாகக் கவனிக்கப்படும். விண்ணப்பத்துறை அனுபவம் தமிழ், ஆங்கில, ஆளுமை, சமூகசேவை முதலியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும். தகவை ஜி. கி. ச. (சாதாரணம்) சித்தி. விண்ணப்பமுடிவு திகதி 23-5-94 விளம்பர இல: ஏ-4086 மே/பா. சமுநாடு, யாழ்ப்பாணம். (ஏ-4086)


# "குடும்பங்களின் வாழ்க்கைக்கு திருமண பதிவு அவசியமானது

## கைதடியில் இளையவன் உரை

(யாழ்ப்பாணம்)

திருமணப்பதிவு என்பது ஒவ்வொரு குடும்பங்களின் எதிர்காலத்திற்கும் அவர்களது குழந்தைகளின் வாழ்க்கைக்கும் அத்தியாவசியமாகிறது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல் துறை தலைப் பொறுப்பாளர் திரு. செ. இளையவன் தெரிவித்தார்.

கைதடி மேற்கு சரஸ்வதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட திருமணப் பதிவு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

திரு. செ. இளையவன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: திருமணப்பதிவு போன்ற பதிவுகள் இலங்கை அரசாங்கத்தினால் சில முக்கிய விடயங்களில் பின்னடைவு ஏற்படுகின்றது. நம்மில் பலர் இத்தகைய பதிவுகள் பற்றி உணராமல் இருக்கின்றார்கள்.

இன்று எத்தனையோ கிராமங்களில் திருமணப்பதிவு இல்லாமல் பலர் வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலை மாறி எல்லோரும் தங்கள் திருமணப் பதிவுகளை உடன் செய்யவேண்டும்.

மக்களின் தேவைகளைப் பிரதிபலிக்கின்ற சரஸ்வதி கிராம அபிவிருத்திச்சங்கம் இன்றுமேற்கொண்டுள்ள இந்த விநியோகமான வேலைத்திட்டத்தை ஏனைய பொது அமைப்புகளும் பின்பற்ற வேண்டும். மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் இந்த சங்கத்திற்கு எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் கூறினார். -மி

## ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புவன.

தற்போதைய அரசியல் சூழ்நிலைகேற்ப அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் திருமதி சிறிமாவோ அல்லது திருமதி சந்திரிகாவா என்பதை நிறுமானமே தீர்மானிக்கும் விரும்பி அவருக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக.

கண்டியின் பிரதம பேச்சாளர் ஒருவர் கருத்தையிட: அடுத்த தேர்தலில் சிறிமாவோ அல்லது சந்திரிகாவோ போட்டியிடலாம் இவ்விரு வரில் எவருடனாவது போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய சக்தி ஐ.தே.க.வில் எவருமே இல்லை என்றார். தமது கட்சியே எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறும் எனவும் கூறினார்.

இதேவேளை அடுத்ததேர்தல் நடவடிக்கைகளுக்காக கண்டியின் முக்கிய கூடிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது; கட்சி அடிமட்டத்திலிருந்து சகலரதும் ஆதரவினைப் பெறும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது. கி

## சைக்கிள்கள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சமுர்த்தி அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சமூக விஞ்ஞான கொழுப்பிவிருந்து வப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட சைக்கிள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது

சமுர்த்தி பயனாளிகளுக்கு கூட்டுறவுச் சங்கம் மேற்படி சைக்கிள்களை இலவசமாக விநியோகம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (72)


தாய்மார்களுக்கு நற்செய்தி
பளிச்சிடும் வெண்மையை
தந்திடும் ஒரே நீலம்

## ரேயல் நீலம்

- பள்ளிக் குழந்தைகளின் ஆடைகளுக்கு பளிச்சிடும் வெண்மையை தருவது ரேயல் நீலம்.
- வீட்டுத் தலைவன் விரும்பி வாங்கி வருவது ரேயல் நீலம்.
- ஆடைகளுக்கு எந்தவித ஊறும் விளைவிக்காமல், பட்டென பளிச்சிடுவது ரேயல் நீலம் ஒன்றுதான்.

தமிழீழத்தில் கூத்தரவாதம் பெற்றது
ரேயல் நீலம் என்பது பெருமைக்குரியது.

சில்லறை விலை ரூ. 6-50 மட்டுமே

சந்தைப்படுத்துவோர்:

ரேயல் இன்டஸ்றீஸ்,
கொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(ஏ-4092)

கோண்டாவில் தில்லையம்பதியில்
[இன்று] ஐந்தாம் திருவிழா

ராகம், பரமேஷ்
தாயே சிவகாமி தணைருள் தாருமம்மா!
நீயே அறிவிந்த நிலத்தில் கதியுமுண்டோ?
தீன தயாபர தில்லையம்பதித் தேவி
பரதாரவிந்தம் அருள் பார்வதி பரமேஸ்வரி
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைவி தீர்ப்பவளே மா!
ஆதரம்! —தேவி
கவிமாமணி ந. வீரமணிஐயர்
இரவு 7 30 மணி:
"வாழ்வு பெருக்கும் மதியே சக்தி"
என்னும் பொருளில் பற்றி
திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
சமயச் சொற்பொழிவு
நிகழ்த்துவார். (இ-4084)

# EXHIBITION

## CAKE & SUGAR CRAFT

யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி
மாணவிகளால் நடாத்தப்படும்
கேக் மாச்சீனி மலர் அலங்கார
கண்காட்சி

20-05-94 வெள்ளிக்கிழமை
காலை 10-00 மணிக்கு
உயர்திரு கே. மாணிக்கவாசகர்
அவர்களால்
(அரச அதிபர் — யாழ்ப்பாணம்)
ஆரம்பித்து வைக்கப்படும்.

தொடர்ந்தும் 21ம், 22ம், 23ம், 24ம் திகதிகளில்
காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை
கண்காட்சி நடைபெறும்.

யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி,
71B, நாயன்மார் வீதி,
கச்சேரி — நல்லூர் ரோட்,
முத்திரைச் சந்தை, யாழ்ப்பாணம்.
(இ-1030)


## பாரதி இல்லம் முதலாமிடம்

(ஆனைப்பந்தி)

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி வித்தியாலய இல மெய் வல்லமை போட்டியில் பாரதி இல்லம் (ஞ்வி முதலாமிடத்தையும் (268 புள்ளிகள்). வள்ளுவன் இல்லம் (பச்சை) 2ம் இடத்தையும் (257 புள்ளிகள்), எழிலன் இல்லம் (சிவப்பு 3ம் இடத்தையும் (256 புள்ளிகள்). இளங்கோ இல்லம் (நீலம்) 4ம் இடத்தையும் (211 புள்ளிகள்) பெற்றுக்கொண்டன. யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. (101)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1993
கலைப்பீடம்

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்காக பின்வரும் பாடங்களிற் பதிவுசெய்திருக்கும் சாதாரண பத்திரதாரிகள்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்துநாகரிகம், தமிழ், அரசறிவியல், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, மெய்யியல், மொழியியல், நுண்கலை, நாடகமும் அரங்கியலும்.

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 16-05-1994 இலிருந்து 30-06-1994ம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பங்களை பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளையுடன் அல்லது தபால் கட்டளையுடன் அல்லது தபால் கட்டளையுடன் 08/- ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30-06-1994க்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். இத்திகதியின்பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
12-05-1994.
(ஏ 4095)

நல்லூர் பிரதேச செயலகம் வாழப்பாணம்

# காடுகள் அழிக்கப்படுவதினால் தேசம் பாலைவனமாக மாறுகிறது!

## மரம் நடுகைப்போட்டி பரிசளிப்பில் உரை

(சாவகச்சேரி)

"எமதுதேசம் இன்று பாலைவனமாக மாறிக்கொண்டு இருக்கின்றது. எமது பகுதியிலுள்ள இயற்கைவளம் கொண்டவடுகளை எதிரிகளான குண்டு வீச்சாலும், திட்டமிட்ட குடியேற்றங்களாலும் அழிந்துகொண்டிருக்கின்ற அவலநிலை. இன்று நாளாந்தம் பெருமளவு மரங்கள் எரிபொருளுக்காகவும், பொருளாதாரத் தேவைக்காகவும் அழிக்கப்பட்டு வருகிறது. எமது வளங்களில் 33 வீதம் காடுகள் இருக்க வேண்டும். இவற்றில் கால்வாசிக்குமேல் இதுவரை அழிக்கப்பட்டுள்ளது.'

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியைத் தலைமையிடமாகக் கொண்ட பகுதியில் நடைபெற்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் மரம் நடுகைத் திட்டத்தின் முதலாம் ஆண்டுப் போட்டியில். தென்மராட்சிப் பகுதியில் வெற்றிபெற்ற பாடசாலைகள், மற்றும் மரணவர்களுக்கான பரிசளிப்பு விழா வைபவத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு. ரவி தலைமையிலும் த. பு. கழகத்தின் தென்மராட்சிப் பகுதி இணைப்பாளர் திரு. சி. விநாயகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மரம் நடுகைத் திட்டத்தில் அறிமுகவுரையை த. பு. கழகத்தின் செயலாளர் திரு. இளங்கோவும், மதிப்பீட்டுரையை நல்லூர் உ. அ. அதிபர் திரு. இளங்கோவும் நிகழ்த்தினர்.

திரு. ரவி தொடர்ந்து தமது உரையில்: எமது சூழல், எமது மகிழ்ச்சி பாதுகாக்க, இந்த வளமான மரம் நடுகைத் திட்டத்தை முன்னெடுக்க நாம் எல்லோரும் ஒன்றிணைந்து பாதுகாக்க இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதி பூணுவோம்.

மூன்று ஆண்டு மரம் நடுகைத் திட்டமானது மரணவர்களுக்கான பரிசளிப்பு விழா வைபவத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு. ரவி தலைமையிலும் த. பு. கழகத்தின் தென்மராட்சிப் பகுதி இணைப்பாளர் திரு. சி. விநாயகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மரம் நடுகைத் திட்டத்தில் அறிமுகவுரையை த. பு. கழகத்தின் செயலாளர் திரு. இளங்கோவும், மதிப்பீட்டுரையை நல்லூர் உ. அ. அதிபர் திரு. இளங்கோவும் நிகழ்த்தினர்.

திரு. ரவி தொடர்ந்து தமது உரையில்: எமது சூழல், எமது மகிழ்ச்சி பாதுகாக்க, இந்த வளமான மரம் நடுகைத் திட்டத்தை முன்னெடுக்க நாம் எல்லோரும் ஒன்றிணைந்து பாதுகாக்க இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதி பூணுவோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயலாளர் திரு. இளங்கோ கூறியதாவது: எமது தேசம் பாலைவனத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் 28 வீதமாக இருந்த காடுகள் 15 வீதமாகக் குறைந்துள்ளன. இவற்றை அழிவிலிருந்து எம்மைப் பாதுகாக்க இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசத்தினதும், மக்களினதும் நன்மை கருதி இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்றார்.

நல்லூர் உ. அ. அதிபர் இளங்கோ தனது மதிப்பீட்டு உரையில்:- மரணவர் இளைஞர் கொண்ட இத்திட்டம் மாணவர்கள் கணிப்பீட்டின் மூலம் புள்ளி விபரம் கொடுக்கின்றோம். நிறுவனத்திற்கு உற்சாகம் தரும் விதமாக புள்ளி விபரங்கள் அமைந்துள்ளன. தென்மராட்சிப் பகுதியில் மரம் நடுகை நூற்றுக்கு எழுபத்திநான்கு வீதம் வளர்ச்சியுறுகின்றது. மாவிடாரீதியில் மாணவர்களின் எண்ணிக்கை பேணப்பட்டது. மரநடுகைக்கு முதற் கண்டமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பதினாறுலட்சத்து எழுபதினாயிரம் ரூபா செலவழித்து இத்திட்டத்தை வளர்த்துள்ளது என்றார். இந்நிகழ்வில் தென்மராட்சி ரீதியில் மரம் நடுகைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சாமரவிடு அ. த. க பாடசாலைக்கு 10,000 ரூபா சுகாதாரப் வைப்புத் திட்டம் புத்தகம் அதன் பாடசாலை அதிபரிடம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாம் இடம் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு 5 000 ரூபா சுகாதாரப் வைப்புத் திட்டம் புத்தகத்தை அதன் அதிபரிடமும் 3 ம் இடம் பெற்ற சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு 2,500 ரூபா சுகாதாரப் வைப்புத் திட்டம் புத்தகத்தையும் பரிசுச் சான்றுகளையும் இந்நிகழ்வில் வைளித்தனர். வெற்றிபெற்ற மரணவர்களுக்கான கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

155-வி

## நிவாரணம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளையின் கடந்தமாதி மாணவர்களுக்கான இரு கண்ட நிவாரணம் கடந்த 17 ந் திகதி முதல் வழங்கப்படுகிறது. 71

## யாழ். நகருக்கு மார்பு நோய் சிகிச்சை நிலையம் மாற்றம்

(மானிப்பாய்)

மயிலிட்டியில் இயங்கிவந்த மார்புநோய் வைத்தியசாலை யாழ்நகரப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். சண்முகதாஸ் மேற்கொண்டு வருகிறார்.

மயிலிட்டியில் முன்னர் இயங்கிவந்த மேற்படி வைத்திய சாலை தற்போது சாவகச்சேரியிலும் கோப்பாயிலும் இயங்கி வருகின்றது. சாவகச்சேரியில் பெண்களுக்கான சிகிச்சை நிலையமும், கோப்பாயில் ஆண்களுக்கான சிகிச்சை நிலையமும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. -71

## மரவேலைப்பயிற்சி விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

யாழ்ப்பாண அரசாங்க மரவேலைப்பயிற்சிப் பாடசாலை கவின் 1994ம் ஆண்டு பயிற்சி நெறிக்கான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் 8ம் வகுப்பு கற்றிருப்பதுடன் 14 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

பயிற்சிக் காலத்தில் போது நாள் ஒன்றிற்கு ஆறுமாத கால ஊக்குவிப்புப் பணமாக 15 ரூபாவும், உற்பத்திப் பொருளில் செய்த கல்பாக 80 வீதம் லாபப் பணமும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் அடுத்த மாதம் 16 திகதி பிரமுகர் பிரதேச செயலர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்படுகின்றனர். 71-வி

## மகளிர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மகளிர் 41 வது சந்திப்பு நாளை மறுதினம் சனிக்கிழமை உருத்திரபுரம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் சந்தன் கனி அமுதன் இசைநாடகம் கறி முகம், வரவேற்பு விக்கினேஸ்வரி, கலைவாணி நாட்டிய நாடகம், இலக்கியச் சிந்தனைகள் போன்றவை இடம் பெறவுள்ளன.

## "சிந்தனையை தூண்டும் இலக்கியம் வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

இலக்கியப் படைப்புகளில் சிந்தனையைத் தூண்டக்கூடிய கருப்பொருள்செறிவு இருக்கவேண்டும் என்று மீசாலை வீரகிசோரம் மகா வித்தியாலய அதிபர் அ. பொ. செல்லையா தெரிவித்தார்.

அறவழி இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் அறவழி பயிலகத்தில் இடம்பெற்ற தென்மராட்சியில் இலக்கிய முயற்சிகள் . ஒரு நோக்கு என்னும் தலைப்பில் இடம் பெற்ற ஒருநாள் கருத்தரங்கில் உரை வாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரை வாற்றும்போது "தென்மராட்சியில் இலக்கியம் படைத்த கவிஞர்களில் புலவர் சிவனை, நீதிபதி மகேசன், மகாலிங்கசிவம், நாவற்குழியூர் நடராசன் வரணியூரான் பண்டிதர் ஞானப்பிரகாசம், கவிஞர் முருகையன், இசை வித்தகர், கலையரசு இமாரசாமி, ஜீவரத்தினம் கந்தவனம், பண்டிதர் சுப்பிரமணியம், செல்வராஜி மகாலிங்கம், கலைச்செல்வி, மகேசுவரி விவேகானந்தன், த. நாகேஸ்வரன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் என்றும் தெரிவித்தார். -வி


## 1993—ம் ஆண்டுக்கான தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகள்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிநெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகள் நேரே குறிப்பிடப்பட்ட திகதிகளில் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சை தொடங்கும் திகதிக்கு முன் அலுவலக நாளில் சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரைத் தமது மாணவர் பிரவேச அலுவலகிசீட்டுடன் தொடர்புகொண்டு தமது நேரகூடி, பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

| பயிற்சி நெறிகள் | பரீட்சை ஆரம்பமாகும் திகதிகள் |
|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல் தகுதித்தேர்வு, 2-ம் வருடம் (பழைய / புதிய பாடத்திட்டம்) (H N D A. II) உயர் தேசிய வணிகவியல் தகுதித்தேர்வு, 2-ம் வருடம் (H. N. D. C. II) ஆங்கில தேசிய தராதரப்பத்திரம் (N. C. E.) கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தராதரப்பத்திரம் (N. C. A. T.) | 23 - 05 - 1994 |
| 2. உயர் தேசிய கணக்கியல் தகுதித்தேர்வு, 3-ம் வருடம் (பழைய / புதிய பாடத்திட்டம்) (H. N. D. A. III) தொழில்நுட்பவியலிலான தேசிய தராதரப்பத்திரம் (குருசார், பொறிமுறை, மின்னியல், கணிய அளவியல்) (N. C. T.) | 06 - 06 - 1994 |
| 3. உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு, 4-ம் வருடம் (பழைய பாடத்திட்டம்) (மு - 118 (H. N. D. A. IV) ஆங்கில தேசிய தகுதித் தேர்வு (N. D E.) தேசிய கைப்பணி (தொழில்) தராதரப்பத்திரம் Trade Courses / படம்வரை பயிலுநர் தராதரப்பத்திரம் (D. A.) | 13 - 06 - 1994 |
| 4. வியாபாரக் கற்கைகளுக்கான தகுதித் தேர்வு, (N D. B. S.) வியாபாரக் கற்கைகளுக்கான தேசிய தராதரப்பத்திரம் (N C. B S) உயர் தேசிய வணிகத் தகுதித்தேர்வு, 3-ம், 4 ம் வருடங்கள் (H. N. D C. III, IV) | 20 - 06 - 1994 |

க. ஜெயரத்தினம்,
அதிபர்,

தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

1994 - 05 - 17. (ஏ-4094)

# சித்த மருத்துவ துறையின் அபிவிருத்திக்கு நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவம் ஆயுர்வேத மருத்துவத்திலிருந்து வேறுபடுத்தப்பட்டு அதன் தனித்தன்மை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற சித்த மருத்துவத்தை அபிவிருத்தி செய்வது பற்றிய கருத்தரங்கில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத் துறைத்தலைவர் வைத்திய கலாநிதி பி. வேராசா, வடக்குக் கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர் திரு. தி. பாலகிருஷ்ணன் உட்பட்ட பல வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

சித்த மருத்துவத் துறையை சுகாதார சேவைகள் திணைக்களத்தின் நேரடி நிர்வாகத்திற்கீழ் கொண்டு வந்து உரிய முறையில் சேவை செய்யவதி மேற்கொள்ளல், இவ்வைத்திய துறையில் மருந்து கள் தயாரிப்பதில் விசேட தேர்ச்சிபெற்ற மருந்தாளர்கள், தொழிற்நுட்பவியலாளர்கள் ஆகிய ஆளணியினை தனியாகவே அமைத்துமேற்கொள்ள வைத்தியத்திற் இணைந்த ஆளணியில் உள்ளவர்களையும் முயற்சி மேற்கொள்ளல் ஆகியவோ இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. 162-வி

# 100 ஆர்ப்பாட்டக்காரர் சென்னையில் கைது!

(சென்னை)

சென்னையில் பொலிசாரின் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடாத்த முயன்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச்செயலாளர் நாடாளுமன்ற வாதிகளையும் உறுப்பினருமான ஏ. நல்லசிவம் உட்பட 100 க்கும் மேற்பட்டவர்கள் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்த வருவதை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டபோதே மேற்படி 100 பேரும் கைதுசெய்யப்பட்டதாகவும் ஏனைய பகுதிகளில் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதியளித்த பொலிசார் சென்னையில் மட்டும் ஆர்ப்பாட்டத்தை தடுக்க முற்பட்டமை கண்டிக்கத்தக்கது என்றும் கண்டனங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

கைது செய்யப்பட்ட அனைவரும் அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர். வ-வி

## சமயச் சொற்பொழிவு

(கொழும்புத்துறை)

சரஸ்வதி-நுணுவில் தெம்பரிதாவளை சேவாவின் வருடாந்த உற்சவதினமான 6ம் திருவிழாவான நாளை 20 ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு டாக்டர் க. சாபாரத்தன் சமய சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். 154

# முறைசாராக் கல்வி பயிற்சி நெறிகள்

(மருதனார்மடம்)

யாழ். கல்வித் திணைக்களம் (கலைத் 2) முறைசாராக் கல்வி பிரிவு அரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கான பாடசாலை அறிவிப்பதற்கு உபகரணங்கள் தயாரித்தல் பயிற்சி நெறியையும் உடைகளைத்தைத்தல் பயிற்சி நெறியையும் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இப்பயிற்சி நெறிகளுக்கு இளைஞர், யுவதிகளாகிய இருபாலரும் விண்ணப்பிக்கலாம் என்றும், பாடசாலை கற்பித்தல் உபகரணங்களை தயாரித்தல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கல்லூரியில் அதிபருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 52-வி

# அதிவிசேட சித்திபெற்ற மாணவர் கௌரவிப்பு

(மானிப்பாய்)

1993ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் அதிவிசேட சித்திபெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்களுக்கு கணித பாடத்தினை கற்பித்த அக்கல்லூரி ஆசிரியரான ரெமிபட் ஜோசிப்புக் பணமாக தலா 100 ரூபாவீதம் வழங்கி கௌரவித்துள்ளார்.

இப்பரிசளிப்பு வைபவம் கடந்த 13ம் திகதி கல்லூரி வாசிகர் மண்டபத்தில் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. -71

## அரசாங்க அறிவித்தல்

**மாகாணம் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரசேவைகள், யாழ்ப்பாணம்.**

**1994ம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுக்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருட்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபதிப்பில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவுசெய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சாகிதாதிகள்
2. மாதனைப் பொருட்கள் (சர்க்கரை விளக்குமாறு, தட்புத்தடி, சவர்க்கார வகைகள்)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்.
4. மருத்துவபாடங்கள், மருத்துவபாட திருத்தவேலைகள்.
5. உருக்குத் தளபாடங்கள், உருக்குத்தளபாட திருத்தவேலைகள்.
6. பிளாஸ்டிக் பொருட்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பைவாளி முதலியன);
7. இரும்பு, பித்தளை, என இரும்புப் பொருட்கள், ஆமைப்பூட்டுக்கள், வாளிவகைகள், குப்பை வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியவை
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்.
9. வைத்தியசாலை உபகரணங்கள் (சேலைன் ஸ்ரான்ட், கிட்டிகள், சிறுகத்திகள், சத்திர சிகிச்சை உபகரண நிலையம்)
10. கட்டிடத் திருத்தத்திற்கு அவசியமான பொருட்கள்., கட்டிடத் திருத்தம்
11. கோப்பேர் வாளை உதிரிப்பாகங்கள் (டீசல், டியூப் கலிபட)

**பதிவுசெய்யத் தகைமையானோர்**

1. பதிவேட்டுக் கட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்படாத வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சன சமூக நிலையங்கள்
7. வருமானவரி செலுத்தும் பிரதிநிதிபெற்ற நிறுவனங்கள்

**விண்ணப்பித்தல்**

மேற்படி வழங்குநர்களைப் பதிவுசெய்துகொள்ள விரும்புவோர் கீழே விண்ணப்பப்படிவத்தைக் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எமது பணிமனையில் ரூ 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்தி பெற்று 01.06.94 புதன்கிழமை காலை 11-00 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1994ம் ஆண்டுக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு, செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

வைத்தியகலாநிதி என். விநோதானந்தன்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்.

சுகாதாரசேவைகள் மாகாணம்
பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
59, கிட்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

(எ 4090)

# முறைசாராக் கல்வி பயிற்சி நெறிகள்

(மருதனார்மடம்)

யாழ். கல்வித் திணைக்களம் (கலைத் 2) முறைசாராக் கல்வி பிரிவு அரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கான பாடசாலை அறிவிப்பதற்கு உபகரணங்கள் தயாரித்தல் பயிற்சி நெறியையும் உடைகளைத்தைத்தல் பயிற்சி நெறியையும் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இப்பயிற்சி நெறிகளுக்கு இளைஞர், யுவதிகளாகிய இருபாலரும் விண்ணப்பிக்கலாம் என்றும், பாடசாலை கற்பித்தல் உபகரணங்களை தயாரித்தல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கல்லூரியில் அதிபருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 52-வி

# தொழிலாளர் வெற்றிடம் 3000 விண்ணப்பம்

(பண்டத்தரிப்பு)

யாழ் கூட்டுறவு பிரிவிலுள்ள அரசினர் வைத்தியசாலையில் நிலவும் கூட்டுறவு தொழிலாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அவைகூட்டுறவு தொழிலாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பதவிக்கு விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதி நாளை 20 ம் திகதி வெள்ளிக்கிழமையாகும். இதுவரை சுமார் முன்னூறிற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 71-வி

# மட்டு. தமிழ் பாடசாலைகள் அரசினால் புறக்கணிப்பு!

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகள் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா அரசினால் புறக்கணிக்கப்படுகின்றன; மாறாக முஸ்லிம் பாடசாலைகளுக்கு மேலும் மேலும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

கிராமப் புறங்களிலுள்ள தமிழ் பாடசாலைகள் நீண்ட காலமாக எதுவித கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன. பெருமளவான மாணவர்கள் தளபாட வசதி விக்கமாக வெறும் நிலத்திலும் மர நிழல்களின் கீழேயும் இருந்து கல்வி கற்று வருகின்றனர். அத்துடன் இப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் பெரும் எண்ணிக்கையில் காணப்படுகிறது.

இதேவேளை நகர்ப்புறப்பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். எழுதுதற்கு வெளி, நிலக்கோடை, மண்டூர், தும்பங்கேணி, பழுகாமம், நாற்பதாம் கிராமம், மகிழவெட்டுவான் போன்ற கிராமங்களிலுள்ள பாடசாலைகளே பேற்பட்ட கவனிப்பாரற்ற நிலையிலாணப்படுகிறது. -ரி

## நீண்டதூர ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்/ வைத்தீஸ்வராக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் முன்னோடி நிகழ்ச்சியாக நீண்டதூர வீதி ஓட்டப் போட்டி நாளை 20ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் இடம்பெறும்.

# டாக்டர்கள் பற்றாக்குறை நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வைத்திய சாலைகளில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை, டாக்டர்களின் பற்றாக்குறை கருதி தட்டுப்பாடு என்பவற்றை உடன் நீக்குவதற்கு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லலித் பொன்னம்பலமோ நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ். சண்முகதாஸ் கண்டியில் வடபகுதிக்கு விஜயம் செய்து இங்குள்ள வைத்தியசாலைகளின் நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்து சென்று ஆளுநர்க்கும் கூறியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 71-வி

# போதைவஸ்து கடத்தலை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

போதைவஸ்து கடத்தலைத் தடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொலிஸ்மா அதிபர் பிரான்சிஸ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

போதைவஸ்துகளுக்கு நாடுகளுக்கு குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றது; இலங்கையில் தற்போது இளம்சந்ததியினர் கஞ்சாவை போதைப் பொருட்களை பாவிப்பதுடன் அவர்களே போதைப்பொருட்களை கடத்தவும் செய்கிறார்கள். இதனால் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இது உடனடியாக தடை செய்யப்பட வேண்டும்.

போதைவஸ்துக் கடத்தலை தடுப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவு ஒன்று தற்போது ஆரம்பிக்கப்படுவதாக பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். வி-வி

# தென்னை செய்கை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் "தென்னைப் பயிர் செய்கையும் தேங்காய் உற்பத்தியைக் கூட்டும் வழிமுறைகளும்" என்னும் தலைப்பில் நாளை 20ம் திகதி விவசாய ஒன்று நிகழ்த்தப்படவுள்ளது.

அதிபர் திரு. ஆனந்தராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ.சத்தியேந்திரன் விரிவுரையாற்றவுள்ளார்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



### மணிவாக்கு

உங்கள் மனதைக் கவரப்படுத்தியவரை மகிழ்வித்து அவரது நன்னம்பிக்கைப் பிரார்த்தனை செய்வதே உங்கள் மனக்காயத்தைஆற்றக்கூடிய மருந்து

-நூரிஜகான்

## நமது நோக்கு

### சிகிச்சை வெற்றியா?

காமினி திசநாயக்காவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளிப்பதற்காக, ஜனாதிபதி விஜயதுங்காவின் நெடுநாளைய முயற்சி வெற்றி அளித்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

தேசியப் பட்டியலிலுள்ளவரே இனப் பிரதிநிதி அமர்த்த பதவி விலக முன்வந்துள்ளார். இதனை உண்மை தியாகம் என ஜனாதிபதி பாராட்டியதாகவும் அரச வானொலி அறிவித்திருக்கிறது.

சிறுபான்மை இனமொன்றினைப் பிரதிநிதிப்படுத்த பிரேமதாசா விரும்பி நியமிக்கப்பட்ட ஒருவர் பதவி விலகவந்தது உண்மை தான் ஆயினும் அவரது நியமனமாக அவருக்குத் தெரிகிறது.

ஆனால், சிறுபான்மை இனமொன்றின் ஒரு அடக்கிப் பேசக்கூடாதே என்ற வகை பெண்ணை இவரதிடம் ஏற்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாதுதான்.

பதவி விலை முன்வரவிட்டால் நாடாளுமன்றத்தையே கலைத்துவிடுவேன் என்று மிரட்டப்பட்டதாக ஒரு செய்தி. பல கோடி ரூபாய்கள் பேரம் பேசப்பட்டதாக இன்னோர் செய்தி.

இதற்கெல்லாம் பிறகு தான் ஒருவர் பதவி விலக முன்வந்துள்ளார்.

"சிகிச்சை வெற்றி! ஆனால் நோயாளி இறந்து விட்டார்! operation success; but patient died) என்பது ஒரு குறும்பான வாசகம்.

ஜனாதிபதியின் இந்த வெற்றி அத்தகையதா? அதாவது, இந்தக் கிடு வெற்றியாக ஏற்படுத்தி விடுவதாக ஐ. தே. க. வை மேலும் ஆட்டம் காண வைத்து, அதன் தோல்வி விரைவுப்படுவதா?

ரெனி டி மெல், காமினி ஜெயவிக்கிரம, ரஞ்சித் அபேகுணசேகர போன்றோரையும் நியமிக்க உதவி வரவப் பதவி விலகும்படி கேட்டிருக்கிறார்.

ஹேமா, சஜித் ஆகியோரையாவதற்கு பிரஸ்தாபிக்கப்படவில்லை. மீண்டும் அவர்களை வலைத்துணிந்துவிட்டாரா ஜனாதிபதி?

கிறிசேன கூறே போன்ற பிரேமதாசாவின் விசுவாசிகளும், பிரேமதாசாவின் குடும்பத்திலிருந்து பிரிந்துவிட்டவர், பேணிக் கொள்வதற்கு தவறுவது, ஏற்கனவே பிரிந்து சென்ற காமினி திசநாயக்கா போன்றோரை இணைத்துக் கொள்ளத்தான் என்பதை அறிவாரோ?

பிரிக்கப்பட்டவர்கள், பேணப்படாதவர்கள் என்கிற இருக்கும் போக்கு தான். ஐ. தே. க. வின் வீழ்ச்சிக்கு வித்திட்டுக் கொண்டு செல்கிறவர்கள் என்பதுதான் அரசியல் நிதி!

# 180 நாட்கள் பூர்த்தியான ஊழியர் நிரந்தரமாவர்

(காணிப்பார்)

வடமாகாணத்திலுள்ள அனைத்து அரச அலுவலகங்களிலும் கடமை புரியும் 180 நாட்களைப் பூர்த்தி செய்த ஊழியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக மாகாண சபைக்கு உத்தரவிடுவதாக அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதற்கான சுற்றறிக்கை ஒன்றும் சகல திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், மாகாண சபைகளின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 71-வி

# யாழ். மாவட்ட தமிழீழ நீதிமன்று இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோவில் வீதியில் இயங்கிக்கொண்டிருந்த யாழ் மாவட்ட தமிழீழ நீதிமன்று சென்ற 17-ந் திகதி தொடக்கம் அதே வீதியிலுள்ள தனியான கட்டிடமொன்றில் இயங்கி வருகிறது.

இந்நீதிமன்றில் குடியியல் சம்பந்தமான சகல வழக்குகளும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. பிழையில் ஐந்து நாட்கள் விசாரணைகள் நடைபெற்று வரும் இந்நீதிமன்றில் நீதிபதி இசைமுதன் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை நீதிபதி நீதிமன்றத் தொடர்தலும் அதே கட்டடத்தில் இயங்கி வருவதாலும் இந்த குற்றவியல் சம்பந்தமான வழக்குகளை நீதிபதி அறிவு விசாரணை செய்து வருவதாலும் தெரிவிக்கப்படுகிறது. —162-வி

## மலரும் மணமும்

## நோய் தீருமா?

ஐ. தே. க. வின் நோய் தீர்க்கப் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட காமினி விஜயசேகர ஓர் வைத்திய கலாநிதி. 1961-67-ல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்றவர்.

டெங்கிக் கொப்பேகடுவ, அநுருத்த ரத்வத்தை (சுதந்திரக் கட்சி) காமினி திசநாயக்கா ஆகியோரின் பரிவித்தோழர்.

1977-ல் ஜே. ஆர். இ. தோ. ச. வின் நோய் தீர்க்க ஆதன் தலைவராகப் பணியார். அதற்கு நோற்ற எதிர்தான் ஐ. தே. க. விற்கும் நடக்குமோ?

மயூரன்,

## இராசி பலன்

19 05 - 1994

வியாழக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 5)

நவமி மு. இ. 11-32 வரை பின் அமாவாசை 7-13 வரை அமிர்த சித்தயோகம் இராகுகாலம் பிற்பகல் 1-23 முதல் 2-52 வரை எமகண்டம் காலை 7-22 முதல் 8-52 வரை

மேடம், விரோதிகள் தொல்லை. வீண் அலைச்சல், மறதி.

இடபம்: அலுவலகம், தொழில் போட்டி. மாணவர் கவனம்.

மிதுனம்: அன்பு பிணைப்பு, பணவரவு, பயணங்கள்.

கடகம்: ஆடம்பர வெறுப்பு, கோபவார்த்தை, மனத்துயர்.

சிங்கம்: விருந்துண்ணல், உல்லாசப் பேச்சு, நண்பர் சகவாசம்.

கன்னி: பகைமை சித்தனை, தொழில் நஷ்டம், மனைவி விரோதம்.

துலாம்: வாகன பவிதம். கல்வியால் பெருமை, பொதுத் துறை ஈடுபாடு-

விருச்சிகம்: திருமணப்பேச்சு, சுவாரஸ்யமான உரையாடல், மனஉற்சாகம்.

தனுசு தொழில் பிரச்சனை, அதிகாரிகள் வெறுப்பு, உடல் அசதி.

மகரம்: மனமகிழ்ச்சி செலவு. பெரியோர் வெறுப்பு.

கும்பம் நற்செய்தி, சுப நிகழ்ச்சி ஒடுக்கங்கள்.

மீனம்: நினைத்தவரைச் சாதித்தல் மனமகிழ்ச்சி தொழில் பராமரிப்பு.

ஜோஸ்யர்

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்மன்றம் நடத்தும் கலாநிதி நா. கதிர்பிரமணியன் வெளியீடான சுப்பிரமணியன் இணைந்தெழுதிய இந்திய சிந்தனை மரபு அறிமுக விழா கைலாசபதி கலையரங்கில் நாளை 20ம் திகதி வெள்ளி பி. ப. 4 மணிக்கு நடைபெறும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-5-19

வியாழன் இரவு

8-01 செய்திகளின் பார்வையாளர்

8-10 கவிதை "சுவைத்தலும் மதிவிடுதலும்"

8-20 "உறைபனிபோல் உயர்வோம்"

"சிறந்த வாழ்வை உருவாக்கும் உன்னதமானவர்" சித்திரம்

8-30 செய்திகள்

8-40 ஏவிடிலிருந்து "மரக்கன்முதல் மாரேதல் வரை" என்ற நூலிலிருந்து கிழக்கு நாடுகள் புரட்சி" எனும் கட்டுரையின் சில பகுதிகள்

8-50 கவிதை கொண்டுவரல்

1994-5-20 வெள்ளி

காலை

7-02 மாவீரர் வணக்கம்

7-15 விடுதலைக் கானங்கள்

7-30 செய்திகள்

7-35 பத்திரிகைச் செய்திகள்

7-40 விடுதலைக் கானங்கள்

நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# படை முகாம் விஸ்தரிக்கப்படுகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புழுதியாறு இராணுவ முகாம் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் யாவும் ஏற்படுத்தப்படுகின்றதாகவும் பாதுகாப்பு துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாற்காலிக இராணுவ முகாமில் நிலைகொண்டுள்ள மேலதிக படைகளையும் புழுதியாறு இராணுவ முகாமிற்கு கொண்டுவரப்படுகின்றதாகவும் தேற்று முதலினம் இம்மாற்றம் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது

இம்முகாமைச் சுற்றி மேலதிக காப்பரண்கள் அமைக்கப்படுகின்றதாகவும் தெரியவருகிறது. (த-வி)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

(தாவடி)

தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்படும் மாதடுவை போக்கடித் திடலிலுள்ள ஓராண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பும் நாளை மறுதினம் சனிக்கிழமை பி. ப 2 மணியிலிருந்து மருதடி தெருஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மருதங்கேணி கோவிலடியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அன்றைய தினம் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. -163-வி

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு ஒழுங்கை அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தின் ஆலய உற்சவம் நாளை 20ம் திகதியிலிருந்து 10 நாட்கள் பொங்கலோடு வைபவத்துடன் ஆரம்பமாகும்.

ஜூன் மாதம் 2ம் திகதி விளக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 3ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(162)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி

(வண்டிதரிப்பு)

கதுமலை தெற்கு ஆனைக்கோட்டை அம்பாள் சனசமூக நிலையம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு நடாத்தும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி எதிர்வரும் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாலரை மணிக்கு கொத்தமல்லி வைரவன் திடலில் நடைபெறவுள்ளது.

ஏ. பி. சி. என மூன்றுபிரிவு வரை நடாத்தப்படும் இப்போட்டிக்கு பார்வையாளர் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. -72

## சுகவாழ்வு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"யுனிசெவ்" உதவியுடன் மாநகரசபை மன்ற நகர்புற அபிவிருத்திப்பணிகள் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளியிடப்படவுள்ள சுகவாழ்வு சஞ்சிகையின் வெளியீட்டு விழா நாளை 20ம் திகதி பி. ப. 2.45 மணிக்கு நாவலர் மோச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக மேயர் கலாநிதி வி. கே. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. கி. முருகையாவும் கலந்துகொள்ளவுள்ளனர். மதிப்புரையை யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசாவால் வழங்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், நகரக் கல்லூரியில் "கடிகியாடு பாடல்" எனும் சிறுவர் நாடகமும் இடம்பெறவுள்ளது (வி)

## பெறுபேறுகள்

(பருத்தித்துறை)

யாழ் கல்வித் திணைக்கள முறை சாரா கல்விப் பிரிவினால் 1992ம் ஆண்டு நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் பெறுபேறுகளின் முறைசாரா கல்விப் பிரிவு வெளியிடும்

(6-ம் பக்கம் பார்க்க)

## பால் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமுல்லை மாவட்டத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு பால் சேகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் பால் நடைவலைப்பேட்டையிலிருந்து பகல் பால் லீற்றர் 6 ரூபா வீதமும், எருமைப்பால் 7 ரூபா வீதமும் கொள்வனவு செய்யப்படுகிறது.

அப்பகுதி மக்கள் இந்நிலையத்தினூடாக தங்கள் பாலினை சந்தைப்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும், அத்துடன் பால் சேகரிப்பு நிலையம் தமது அருகிலேயே இருப்பதால் பாலினை நிலையத்தில் கொடுத்து விடுவது மட்டுமல்ல ஏனைய அன்றாட தொழில் முயற்சிகளை கவனிக்கக் கூடியதாகவும் முடிவது என்கிறார்கள்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிராம முன்னேற்ற சங்கம் கல்வி வளர்ச்சி அமைப்பினரால் இன்று 19ம் திகதி பி. ப. 2 மணிக்கு கலைஞர்களுக்கான பேச்சுப்போட்டியும் 21ம் திகதி பி. ப. 2 மணிக்கு சிறுவர்களுக்கான பேச்சுப்போட்டியும் 22ம் திகதி பாலர் பிரிவினருக்கான வாய் மொழி மூலம் பரீட்சையும் நடைபெறும்.

அமைப்பு நிலையத்தில் மேற்படி போட்டிகள் யாவும் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் நடாத்தப்படும் மாநடுவலைப் போட்டித் திடலுக்கு ஓராண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பும் இன்று பி 2மணி வலைவிலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

0 0

(கொழும்புத்துறை)

அமரர் வ. வி. குலரத்தினம் நினைவுப் பணி மன்றத்தினால் இன்று விவரணக்கிழமை மாலை 5 மணிக்கு கல்வியங்காட்டில் "மூதறிஞர் வ. வி. குலரத்தினம்" நூலகம் ஒன்று மன்றத் தலைவர் திரு. வ. சிற்றம்பலம் தலைமையில் தொழிலதிபர் கலாநிதி வ. கனகரட்ணத்தால் திறந்து வைக்கப்படவுள்ளது 154

0 0

(கொழும்புத்துறை)

மாற்றம் சஞ்சிகையின் கலைமாலை, விநாயகர் ஸ்தோத்திரம், வரசக்தி. நலன் விரும்பிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று ஆலையடி வேம்பு நவமோ தங்கவேலில் இன்று பிற்பகல் 4-00 மணிக்கு விவகாரம் சந்திரன் உமா தமிழ்த்தாய் மன்றத்தில் நடைபெறும். (154)

0 0

(வல்வெட்டித்துறை)

அராலி இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று விவரணக்கிழமை மாலை 5மணியளவில் கல்லூரி அரங்கில் கல்லூரி அதிபர் எஸ். செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் கல்வித்திணைக்களப் பணிப்பாளர் கோ. கி. சேனாதிராசா பிரதம விருந்தினராகவும் தமிழீழ கல்வி ஆலோசகர் திரு. க. சிறுண்மாஸ்டர் பிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். 139

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயபூர உற்சவம் இன்று விமரிசை நடைபெறவுள்ளது. இன்று மாலை 05 மணிக்கு வசந்த மண்டப பூசையும் ஆராதியும் இடம்பெற்ற அடியார் வீதிவலம் வருவார். (வி)

## இன விடுதலை வேண்டின் வன நடுதலை செய்வோம்

★ மனித உரிமை மீறல்

# இலங்கை தலைமையிலான குழு இஸ்ரேல் மீது பலத்த கண்டனம்

(ஜெனீவா)

பலஸ்தீனியப் பகுதிகளில் இஸ்ரேல் தொடர்ந்தும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது வருவதாக இலங்கைத் தூதுக் குழுவினர் ஸ்ரான்லி கலபகே தலைமையிலான மூன்று நாடுகளின் கண்காணிப்புக் குழு பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது

இலங்கை, மலேசியா, சென்னி நாடுகள் அங்கம் வகிக்கும் இக்குழு அண்மையில் அரபு நாடுகளுக்குச் சென்று ஆக்கிரமிப்பு பலஸ்தீனிய அதிகாரசபை உறுப்பினர்களுடனும், பிரமுகர்களுடனும், பின்னர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்து மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுடனும் கலந்துரையாடி திரும்பியுள்ளது. இதன் பின்பே இவ்வறிக்கை ஒன்றை ஜெனீவாவிலுள்ள குழுவின் தலைவர் ஸ்ரான்லி கலபகே வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் 1993ம் ஆண்டு செப்டெம்பரில் இஸ்ரேல் பலஸ்தீனிய ஒப்பந்தம் கையெழுத்தான பின் பலஸ்தீனியர் பகுதியான மேற்குக் கரையோரம், காஸா பகுதியில் இஸ்ரேல் படையினர் மனித உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது

இக்குழு டமாஸ்கஸ், அம்மான், பெய்ரூட் போன்ற அரபு நாடுகளில் தங்கியுள்ள அகதிகளுக்குச் சென்று இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது. இக்குழு தயாரித்துள்ள அறிக்கை விரைவில் ஐ. நா. மனித உரிமை குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். இவ்வருடம் செப்டம்பரில் நடைபெறவுள்ள ஐ. நா. மனித உரிமை அமைப்பின் 49வது அமர்வில் இது பற்றி ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -வி

## காமினிக்கு விரைவில் அமைச்சர் பதவி

(தொழும்பு)

காமினி திஸாநாயக்காவுக்கு விரைவில் அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாம்.

இதற்கான நடவடிக்கைகளில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க மும்முரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று நாடாளுமன்ற உறுப்பினராக திரு. காமினி திஸாநாயக்க பதவிப் பிரமாணம் செய்வுவிடுவார்.

நாடாளுமன்ற உறுப்பினராக திரு. காமினி திஸாநாயக்க பதவியேற்ற பின் நாட்களில் அமைச்சராக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வி-வி-

## சுகயீன லீவில் தொழில் நுட்ப மரிசோதகர்கள்

(தொழும்பு)

நாடெங்கிலும் அரச ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் வைத்திய தொழில் நுட்ப மரிசோதகர்களில் அனைவரும் இன்று சுகயீன லீவில் செல்லவுள்ளார்களாம்.

இவர்களது பதவி உயர்வு மற்றும் சம்பள அமைப்பு நிராகரித்து வருவதாகக் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே, இவர்கள் வைத்திய லீவில் செல்லவுள்ளார்களாம்.

## மருந்து விநியோகிகளின் ஏகமனதான தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மருந்து வணிக மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும், மொத்த விநியோகர்களும் கலந்துரையாடி, பின் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:

மொக்கைவு (ஒப்பீட்டு) விலையில் சலுகை ஒப்பம் வைக்கவேண்டும் மருந்துக் கொள்வனவுப் பட்டியல் (இன்வொய்ஸ் பரிசீலனை செய்தல். சீரான மருந்துக் நிலையத்தை மேற்கொள்ளவைத்திருக்கும் முன்னுரிமை எம்மை நீக்கி புதிதாக்கல். கிளைகளை விநியோகிக்கவும் அதே நேரம் மொத்த விநியோகர்களாகவும் செயற்படும் மருந்தகங்கள் குறிப்பிட்ட விழுக்காடு (%) மேல் தமது மருந்தகத்துக்கு ஒதுக்கி வைத்திருக்க முடியாது. இது பதுக்கலை ஊக்குவிப்பதாகவே இருக்கும்.

மொத்த விநியோகர்கள் ஆயுள்வேத வைத்தியத்துறை நட்டுபோடாக்க காலத்தில் மருந்துகள் கொடுக்க நிறுத்துதல். (தேங்கியிருக்கும் பற்றுப்பத்திரம் வழங்கலாம்) கொழும்பு கொள்கலனிலிருந்து (செலவுகள் அனைத்தும் கழிக்கப்படாமல்) 50% விழுக்காடு வைத்து விநியோகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. -வி

## மென்சன் வவுச்சர் அனுப்பப்பட்டது

(மானிப்பாய்)

நாழ், மாவட்ட ஓய்வூதியர்களின் மே மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் ஓய்வூதியப் பிரிவு உத்தியோகத்தர்களின் துரித முயற்சியினால் நாழ். செயலகத்திலிருந்து நேற்று புதன்கிழமை உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. -71-வி

## புதிய துணைவேந்தர்

(தொழும்பு)

பேராதனியர் பல்கலைக்கழக தொழுமுகப் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தொழுமுகப் பல்கலைக் கழகத்தில் வைத்திய பீடாதிபதியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. -ம-வி

## சொத்தி உபாலியின் இரு தமிழ் சகாக்கள் கொழும்பில் கைது

(தொழும்பு)

'சொத்தி உபாலி' யின் இரு முக்கிய தமிழ் கூட்டாளிகள் கடந்த திங்களுக்கு முன் கொழும்பு விதியில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

ரவிந்திரன், உதயகுமார் என்ற இருவருமே கைது செய்யப்பட்டவர்கள். இவர்கள் கொழும்பு 'சொத்தி உபாலி' யின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு உடந்தையாயிருந்தார்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சொத்தி உபாலி டி. ஐ. ஜி. ஏ. எஸ் செனிரத்ன தலைமையிலான சி. ஐ. டி. பொலிசாரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், இவரது சகாக்கள் பலர் கைது செய்யப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். -வி

## இலங்கை மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அறிவித்துள்ள பல நிவாரணத் திட்டங்களுக்கும் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் பணத்தை வழங்கக் தெரிவித்துள்ளன. -வி-வி

## புலிகள் நேற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் சேதமாக்கிய தடங்களை அகற்றி ஏ. கே. இலகு இயந்திரத்துப்பாக்கி-1, கனரக இயந்திர துப்பாக்கி-1, றபறைத்தொடர்கள் - 90, 56 ரக துப்பாக்கி - 1, கனரக றபறைகூடு - 1. மின் சூன் விளக்கு - 1, ஆகிய வற்றையும் புலிகள் கைப்பற்றினர்கள்.

இத்தாக்குதலில் புலிகளின் தரப்பில் லெப். தமையப்பன் என்கிற வேதா (ரவிக்குமார் கண்டக்கலம்) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (வி-வி)

## மிக விரைவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜினாமாசெய்யுமாறு இவரை கேட்டுக் செல்லவும் ஜனாதிபதியும் கருதியிருந்தார்.

மேலும் விரைவு எம். பி. பதவியிழக்கமுற்றியும் தற்போது தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் கூறுகிறது தேசிய பட்டியலில் எம். பி. க்கள் பதவி விலகுமாறு கட்சி தலைமைப் பீடம் வற்புறுத்தி வருகிறதாம். -ம-வி

## பல லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவை வழங்க ஐ. தே. க. தலைமைப்பீடம் முன்வந்திருந்தது.

இதன் ஒரு கட்டமாகவே ஜனாப் அமிர் பேரம் பேசி தனது இன தலைவரும் கருதிக் கொண்டாத எம். பி. பதவியிலிருந்து விலகிக் கொண்டதாகவும் இவரைப்போன்றே ஜனாதிபதி விருப்பும் வேறு சிலரை எம். பி. யாக்க தேசிய பட்டியல் எம். பி. க்களுக்கு பல லக்சம் ரூபா வழங்கவும் கட்சி முன்வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

## இனவாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவும் இனவாதப்பிரச்சாரங்களை பெருமளவில் செய்தமையினாலேயே தேர்தலில் ஐ. தே. க. வெற்றி பெற்றது.

இதனாலேயே எதிர்வரும் தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகள் முக்கியத்துவம் பெறுவதினால் ஆளும் ஐ. தே. க. வும், எதிர்க்கட்சிகளும் தமது தேர்தல் பிரச்சாரங்களில் இனவாதப் பேச்சுக்களை முன்னெடுத்திருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## வாதாள உலக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த குற்றவாளிகள் பற்றி தகவல்கள் தருவோரு பொலிஸ் தகவலைக் கோர்க்கவிடாலும் பொலிசாரும் இவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்களோ என்று சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கிறது என்று பாதாள உலகக் குற்றவாளிகளாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமது குடும்பத்தை சேர்ந்த பதிதுபேரை சொத்தி உபாலி கொலை செய்தாக பெற்றார் ஒருவர் பொலிஸாருக்கு புகார் செய்துள்ளார். (ம - வி)

## பெறுபேறுகள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. அரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி முறைசாரா கல்விப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய 11மாணவர்களில் உடை அமைத்தலிலும் 05 மாணவர்கள் வீட்டு மின் இணைப்பு மற்றுமவரட உற்பத்தியிலும் சித்தியடைந்துள்ளனர். -52

## காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கன்ற உறுப்பினராகுவதற்கு தேசிய பட்டியலில் இருந்த "அமிர்" நேற்று காலை ராஜினாமா செய்தார்.

ஐ. தே. கவினுள்ளே பலத்த எதிர்ப்பின் மத்தியிலே திரு. காமினி திசநாயக்கா எம். பி. யாவதாக கட்சிக்குள் முறுகல் நிலை மேலும் அதிகரிக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. -ம-வி

## பிரேமா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகார்.

பிரேமதாசாவின் கொலையை தீவிரமாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி விஜேதுங்க விருப்பு வதாக ஐ. தே. க. வின் செயலாளர் திரு. காமினி விஜய சேனா தெரிவித்துள்ளார்.

பிரேமதாசாவின் படுகொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்பது தமது சந்தேகமாக இருப்பதாகவும், இக்கொலையை, பாரபக்சமின்றி விசாரணை செய்வதற்கு தனியான கமிஷன் ஒன்று நியமிக்கவேண்டும். என்று பிரேமதாசாவின் மூடும் பத்திரிகை வலியுறுத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது. வி-வி

## கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் இவர்களிடமிருந்து முக்கியமான தகவல்கள் பெறப்படுகின்றதாகவும் இதன் மூலம் மேற்படி குண்டு வெடிப்புக்கள் குறித்து பிரபோசன மான தகவல்கள் கிடைக்குமெனவும் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இக்குண்டு வெடிப்பில் படுகாயமடைந்து தனது வலது கண்பார்வையை இழந்துள்ள மதிவாணன் பொலிஸாருக்கு வாக்கு மூலம் அளித்திருப்பதாகவும் இதன் மூலமும் பல தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது மதிவாணன் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகிறார். (வி)


தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித் தகைமைகள்:- 8ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை

உயரம்: 5' 6"

வயது:- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சாதாரண தபாலூடாக 25 - 5 - 94ம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை தலைமையகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும் நேர்முகத்தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமுகம் தரவும்.

பொறுப்பாளர்

தமிழீழ காவல்துறை, தமிழீழம்.

(ஏ-4093)


இப்பத்திரிகை "சுடர்" விமிகெட் கம்பனியினால் யாழ்ப்பாணம் கோட்டை வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under License Number: E/10336/B